# இலங்கையின் பொருளாதாரம் மோசமடைகிறது

(லண்டன்)
இலங்கையின் பொருளாதாரம் மோசமடையும்நிலையை அடைந்துள்ளது.
வடக்கு-கிழக்கு யுத்தத்தினல் அதிகரித்துவரும் போர் செலவுகள் இலங்கையின்
(4-ம் பக்கம் பார்க்க)

பங்குனி (92)

விலை ரூபா 5.00

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவா ஆண்டு 2023 பங்குனி 1 இதழ் 33
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 14 — 03 — 1992

## வடக்கு கிழக்கில் யுத்தத்தை நாம் விரும்பவில்லை அநுரா

(கொழும்பு)
வடக்கு-கிழக்கு பகுதிகளில் தொடரும் யுத்தத்தை நாம் விரும்பவில்லை என்று எதிர்க்கட்சி பதில் தலைவர் திரு. அநுரா பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.
(4ம் பக்கம் பார்க்க)

## கிறிஸ்தவ குழு அரசஅதிபரை சந்தித்தது

(யாழ்ப்பாணம்)
கொழும்பிலிருந்து யாழ். நகருக்குத் தற்போது வந்திருக்கும் கிறிஸ்தவத் தூதுக்குழுவினர் நேற்று யாழ். செயலகத்தில் அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகரை
(4-ம் பக்கம் பார்க்க)

# வவுனியா பகுதியில் நேற்று குண்டுவீச்சு விமான தாக்குதல்

(வவுனியா)
**வவுனியா மாவட்டத்தில் நேற்றுக் காலை மேற்கொள்ளப்பட்ட குண்டுவீச்சு விமானத் தாக்குதலில் பல வீடுகள் சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.**

நேற்று முற்பகல் 11-30 மணிக்கு புளியங்குளம் பகுதியை நோக்கி மூன்று குண்டுவீச்சு விமானங்கள் மாறி மாறி தாக்குதலை மேற்கொண்டதாகவும் தாக்குதல் பலமணி நேரம் தொடர்ந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளையில் நேற்றுமுன்தினம் குமழமுனைப் பகுதியை நோக்கி ஹெலிகொப்டர் மேற்கொண்ட தாக்குதலில் உழவு இயந்திரம் ஒன்றும் இன்னொரு வாகனமும் பலத்த சேதமடைந்ததாகவும் இவ்விரு வாகனங்களையும் இலக்காகக்கொண்டே தாக்குதல் தொடரப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (சு)

## இராணுவம் துப்பாக்கி பிரயோகம்

(யாழ்ப்பாணம்)
வளலாய், வீமன்காமம், கட்டுவன் பகுதிகளில் நிலைகொண்டுள்ள ஸ்ரீலங்கா இராணுவத்தினர் நேற்று மக்கள் குடியிருப்புகளை நோக்கி 50 கலிபர் தாக்குதலை நடாத்தியுள்ளனர்.

இதேவேளையில் திருவடிநிலை மாதகல் பகுதியிலிருந்து துப்பாக்கிப்பிரயோகமும் இராணுவத்தினரால் நடத்தப்பட்டது. (ச)

## பிரபாகரன்பற்றிய தகவல்களை இந்தியா கோருகிறது

(மணிலா)
விடுதலைப்புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் பற்றிய முழு விபரங்களையும் முறைப்படி தமக்கு தெரிவிக்கும்படி இந்தியா, இலங்கையிடம் கேட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இது சம்பிரதாயபூர்வமான ஒரு முறையென்றும் முன்னர் பிரபாகரன் எங்குள்ளார் அவர் பற்றியும் அவரின் துணையாட்கள் பற்றிய தகவல்கள் என்ன என்பதுபற்றி இந்தியா முன்னரே இலங்கையிடம் கேட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (வி)

## 510 இல. தமிழ் அகதிகள் தமிழகத்திலிருந்து புறப்பாடு

(சென்னை)
510 பேர் அடங்கிய இலங்கைத் தமிழ் அகதிகளின் 6வது குழு நேற்றுக்காலை எம். வி இராமனுஜம் என்ற கப்பலில் இராமேஸ்வரத்திலிருந்து தலைமன்னாருக்கு புறப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த அகதிக் குழுவினர் எதிர்வரும் 17 அல்லது 19ம் திகதி இலங்கைக்குப் புறப்படவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (க)

வன்னிவிக்கிரம நடவடிக்கையில்

## இராணுவம் தமிழர் வீடுகளில் கொள்ளை என குற்றச்சாட்டு

[வவுனியா]
'வன்னி விக்கிரம இராணுவ நடவடிக்கையில்' ஈடுபட்ட இராணுவத்தினர் வவுனியாவிலுள்ள தமிழர்களின் வீடுகளில் கொள்ளையடித்தார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இப்பகுதியிலுள்ள வீடுகளிலிருந்து பெறுமதியான பொருட்கள் இராணுவத்தினரால் திருடப்பட்டுள்ளதனை அப்பகுதிமக்கள் ஊர்ஜிதம் செய்துள்ளனர்.

இக்குற்றச்சாட்டுகளையடுத்து இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடும் படையினர் முகாம் திரும்பும்போது அவர்களை கடுமையாக சோதனையிடுமாறு கூட்டுப்படைத்தலைமையகம் உத்தரவிட்டுள்ளது.

## வெளிநாட்டுநாணய மாற்று சட்டங்கள் தளர்வு

[கொழும்பு]
விடுமுறை கால பிரயாணம் கல்வி சம்பந்தமான வெளிநாட்டு நாணயமாற்று கட்டுப்பாட்டு சட்டங்களை மத்திய வங்கி தளர்த்தியுள்ளது.

ஆண்டு ஒன்றுக்கு வெளிநாட்டு பயணத்தை மேற்கொள்ளும் ஒருவருக்கு இதுவரை அளிக்கப்பட்ட 2,500 டொலர் இனிமேல் 5,000 டொலராக அதிகரிக்கப்படும். கல்விக்கான கொடுப்பனவுத் தொகைகள் தாராளமயப்
(4-ம் பக்கம் பார்க்க)

## வடக்கு கிழக்கு பிரச்னைக்கு விரைவில் தீர்வு ஜனதிபதி

(கொழும்பு)
"வடக்கு- கிழக்குப் பிரச்னைக்கு விரைவில் நிரந்தர தீர்வு காணப்பட்டு விடும்"

அண்மையில் கொழும்புத் துறைமுக சுங்கப்பகுதி ஊழியர்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு ஜனதிபதி பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கு நிரந்தர தீர்வு காண்பது தொடர்பாக நாடாளுமன்ற தெரிவு குழு மூலமும் சர்வகட்சி மாநாடு மூலமும் முயற்சிகள் மேற்கொள்ளப்
(4-ம் பக்கம் பார்க்க)

## தெரிவுக்குழு முன் சாட்சியமளிக்க டாக்டர் சிவகுமாரன் மறுப்பு தெரிவிப்பு

(கொழும்பு)
யாழ். போதனவைத்தியசாலை டாக்டர் ச. சிவகுமாரன் நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன் சாட்சியமளிக்க மறுப்புத் தெரிவித்துள்ளார் என்று தெரியவருகிறது.

இனப்பிரச்னை தீர்வுக்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன் கடந்த புதன் கிழமை ஆஜராவார் என்று எதிர்பார்க்கப்பட்ட டாக்டர் சிவகுமார் கடைசி நேரத்தில் தெரிவுக்குழுமுன் அஜராகி தனது யோசனைகளுக்கு விளக்கம் தெரிவிக்கவில்லை.

வாய்மூல விளக்கமளிப்பதற்கு தெரிவுக்குழுவினால் அழைக்கப்பட்ட ஒரே ஒரு பிரமுகர் டாக்டர் சிவகுமார் என்பது குறிப்பிடத்தக்கது.

## யாழ். ஆயர் ஓய்வு பெறுகிறார்

(யாழ்ப்பாணம்)
யாழ். ஆயர் கலாநிதி பி. தியோகுப்பிள்ளை அடுத்த மாதம் நடுப்பகுதியிலிருந்து ஓய்வு பெறப்போவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

70 வயதான யாழ். ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகை
(4-ம் பக்கம் பார்க்க)

கூட்டுறவுச் சங்கங்களில்

## அரிசி, மா, பருப்பு போதியளவு இன்றுமுதல் பெறலாம்

(யாழ்ப்பாணம்)
அரிசி, மா, பருப்பு வகைகளை பாவனையாளர்கள் இன்றுமுதல் பலநோக்கு கூட்டுறவு சங்கத்திலிருந்து தேவையான அளவு கொள்வனவு செய்யலாம் என யாழ். செயலகம் அறிவித்துள்ளது.

அரிசி, மா, பருப்பு போன்ற உணவுப் பொருள்கள் போதிய அளவு கையிருப்பில் இருப்பதினலேயே இப்பொருட்களை ப. நோ. கூ. சங்கங்களில்
(4-ம் பக்கம் பார்க்க)

## கைத்தறி நெசவு நிலையங்களை இயங்க வைப்பதற்கு அரச அதிபர் முயற்சி

(யாழ்ப்பாணம்)
கைத்தறி நெசவு நிலையங்களுக்கு வேண்டிய கைத்தறி நூல் வகைகளை கொழும்பிலிருந்து விரைவில் வரவழைத்து வழங்குவதாக நேற்று தம்மைச் சந்தித்த கைத்தறி நெசவாளர் சங்க
(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### கண்டெடுக்கப்பட்டுள்ளது

நல்லூர் அரசடி வீதியில் பணத்துடன் பர்சு ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் அத்தாட்சி காட்டி பெற்றுக்கொள்ளவும். இ. குமாரலிங்கம், 213, இந்துமகளிர் கல்லூரி ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம், (சி-6060)

### PITAWAKKA PLUS

மதுபானத்தால் ஏற்படும் ஈரல் வியாதிகளுக்கும் வேறு மருந்துகளால் உடலில் ஏற்படும் நச்சுத்தன்மைகளுக்குமாக 9 வகை முலிகை அடங்கியது. கிடைக்குமிடம்: எஸ். ரி, மெடிக்கல்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-5993)

### நோவு வைத்தியம்

ஒட்டகப்புலம் சமத்தூர் நோவு எண்ணை கிடைக்குமிடம்: எஸ். ரி. மெடிக்கல்ஸ் 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-5844)

### பரீட்சை
(ஆண்டு 6, 5)

புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை ஆண்டு 6, 21-03-92 சனி மு. ப. 7, மு. ப. 11, நேரங்களிலும் ஆண்டு 5 பரீட்சை 22-03-92 ஞாயிறு அதே நேரங்களிலும் நடைபெறும். பதிவு செய்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி யாழ்ப்பாணம். (சி-6061)


★ தமிழீழ ஆய்வு நிறுவன

# வதிவிடவேளாண்மைசெய்கை யாழ். மாவட்ட போட்டி முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தமிழீழ ஆய்வு நிறுவனத்தால் நடாத்தப்பட்ட 'வதிவிட வேளாண்மைச் செய்கைப்போட்டி முடிவுகளில் பரிசில் பெறுவோர்களின் பட்டியல் இங்கு தொடர்ச்சியாகத் தரப்படுகிறது:

யாழ். மாவட்டம் 1. செ. தயாபரன், இணுவில், 2. கி. சுகிர்தலிங்கம், மந்திகை, 3. வை. சரஸ்வதி, தாளையடி.

வலிகாமம் பிரிவு: 1. வை. சாந்திகுமார், கொக்குவில், 2. அ. ஆனந்தராஜா, சங்கானை, 3. க. இராமநாதன், இணுவில்.

வடமராட்சிப்பிரிவு: 1. இ. செல்வகாந்தம், செம்பியன் பற்று, 2. வி. பலாமணி, கெருடாவில், 3. ம. புலேந்திரன், வதிரி.

தென்மராட்சிப் பிரிவு: 1. பொ. நவரத்தினராசா) நுணுவில், 2, புஷ்பராணி சுகுமார் மீசாலை, 3. கு. தனபாலசிங்கம், முகாவில், இயக்கச்சி,

புலோலி கமநலசேவைப் பிரிவு: 1. சோதிலிங்கம் ஏகாம்பரநாதன், பொலிகை, 2. சண்முகம் தம்பிராசா, பொலிகை, 3. செ. நடராசா, வதிரி

ஆறுதல் பரிசுகள்: 1. சிவபுண்ணியம் மயில்வாகனம், வதிரி, 2. அருமைச்சந்திரன் விஜயராணி, கெருடாவில், 3. சின்னத்துரை சாந்திலிங்கம், கெருடாவில், 4. இ. சிவஞானம், பொலிகை, 5. நல்லதம்பி நாகலிங்கம், சரணவாய், 6. சிவாம்பிகை ஜெயராசசிங்கம், வதிரி, 7. கந்தவனம் நபாரத்தினம், கரவெட்டி, 8. கிறிஸ்தோபர் ஜேமன் அலோசியஸ், கரவெட்டி, 9. தமயந்தி விக்கினேஸ்வரன், கரவெட்டி, 10. கனகசிங்கம் புவனேந்திரன், கரவெட்டி.

அம்பன் கமநலசேவைப் பிரிவு: 1. சி. செல்லமுத்து, மந்திகை, 2. க. கனகசபாபதி, வதிரி, 3, சி. செல்வநாயகம், மந்திகை,

ஆறுதல்பரிசுகள்: 1. பொன் பூரணம்பிள்ளை, வியாபாரிமூலை, 2. கணபதிப்பிள்ளை கந்தசபேசன், குடத்தனை, 3. ப. அருட்பிரகாசம், மந்திகை, 4, சபாரத்தினம் கனகநாதன், வியாபாரிமூலை, 5. இ.சிவனேஸ்வரி, மந்திகை, 6, க, தணிகாசலம், மந்திகை, 7, சு. தங்கராசா, வதிரி, 8, சோ. அன்னலிங்கம், மந்திகை, 9. க. கந்தசாமி, வதிரி, 10. ச. சண்முகநாதன், மந்திகை.

கைதடி கமநலசேவைப் பிரிவு: 1. நாகமணி ?ண்முகம், தனங்கிளப்பு, 2. இளையதம்பி இராசையா, கைதடி, 3. கோபாலபிள்ளை துரையப்பா, கைதடி.

ஆறுதல் பரிசுகள்: 1. கந்தையா மகேந்திரன், நாவற்குழி, 2. நாகமுத்து நாகலிங்கம், மறவன்புலவு, 3, தில்லைநாதர் தங்கலேலு, மறவன் புலவு, 4. சேதுகாவலர் கந்தசாமி, கோயிலாக்கண்டி, 5, கிருஷ்ணன் ருகாந்தினி, கைதடி, 6. திருஞானசம்பந்தர் பகீரதன், மறவன்புலவு, 7. தம்பு செல்லத்துரை, கைதடி, 8. தியாகராசா ரவிச்சந்திரன், மறவன்புலவு, 9. சோமலிங்கம் நடேஸ், மறவன்புலவு, 10. சிதம்பரம் சுப்பிரமணியம், கைதடி.

[தொடரும்]

## ஸ்ரீசீதாராம பட்டாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வண்ணை வெங்கடேச வரதராஜப்பெருமாள் தேவஸ்தானத்தில் 18-ம் திகதி புதன் கிழமை நடைபெற இருக்கும் பங்குனி உத்தர விழா நிகழ்ச்சியின்போது, கடந்த 22-2-92 முதல் தொடர் நிகழ்ச்சியாக தெல்லிப்பளை ஆயர்பாடி ஆழ்வார்கள் ஆச்சிரம சுவாமிகள், ஸ்ரீவே. த. மயில்வாகனத்தினால் நிகழ்த்தப்பட்டு வந்த ஸ்ரீமத் கம்பராமாயண கதாப் பிரசங்கத்தின் பூர்த்திவிழா நடைபெறும்.

அன்று ஸ்ரீ சீதாராம பரத லட்சுமண சத்துருக்க ஆஞ்சநேய பட்டாபிஷேக வைபவம் நடைபெறும். பக்தர்களுக்கு ஸ்ரீசீதாராம ரட்சக ஆசீர்வாதமும் துளசி பிரசாதமும் வழங்கப்படும். நாட்டு மக்களின் துன்ப நீக்கத்திற்காக இவ்வாராதனை நிகழ்த்தப் பட்டுவந்தது. இதை நிறைவு செய்தற்பொருட்டு 19ம் திகதி வியாழன் பகல் பத்து மணிக்கு அன்னதானமும் இடம்பெற உள்ளது.

## மாணவர் உணவுமுத்திரை

(வட்டுக்கோட்டை)

சங்கானை பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான மதிய உணவு முத்திரைகள் செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டுவருகின்றன.

கடந்த டிசம்பர், ஜனவரி மாதங்களுக்கான முத்திரை தற்போது வழங்கப்பட்டுவருகின்றன. இவற்றைப்பெற்றுக்கொள்ளாத அதிபர்கள் தமது பாடசாலை மாணவர்களுக்கான முத்திரைகளைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் அகதிகளாகச்சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ள மாணவர்களுக்கும் சேர்த்து வழங்கப்படுகிறதெனவும் தெரிவிக்கப்படுகிறது. (139)

## பொலிஸ் போர்வையில் வீடுகளில் கொள்ளை

(கொழும்பு)

இரகசியப் பொலிஸார் என்று கூறிக்கொண்டு வீடுகளில் புகுந்து தங்கச் சங்கிலிகளை கொள்ளையடித்த இரு இளைஞர்கள் கம்பஹா பகுதியில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கம்பஹாவிலுள்ள சீதுவைப் பகுதியிலுள்ள வீடுகளில் புகுந்த இரு இளைஞர்கள் தம்மை இரகசியப் பொலிசார் எனக் கூறிக்கொண்டு வீடுகளில் ஆயுதங்களை தேடுவதாகக் கூறிவிட்டு அங்கிருந்த தங்கச்சங்கிலிகளை திருடிச் சென்றனராம்.

இவர்கள் இருவரும் தற்போது பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

## தேச நிர்மாணிகள் பிரிவின் நிர்மாணத்திட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் தேசநிர்மாணிகள் பிரிவு இவ்வருடத்தில் தமிழீழத்தின் பல பகுதிகளிலும் பல நிர்மாணத் திட்டங்களை மேற்கொள்ளவுள்ளது.

யாழ். குடாநாட்டில் சிறு குளங்களைப் புனரமைத்தல், வாய்க்கால்கள், உவர்நீர்த் தடுப்பு அணைகளைப் பராமரித்தல், கட்டிடத்தேவைக்கான சுண்ணும்புஉற்பத்தியை விரிவுபடுத்தல், வன்னி மாவட்டத்தில் பெரிய நீர்ப்பாசனக் குளங்களைப் புனரமைத்தல், வன்னிப்பிராந்தியத்தில் செங்கட்டி உற்பத்தி செய்தலும், ஊக்குவித்தலும், பறங்கியாறை திசை திருப்புவது தொடர்பான நில அளவு வேலைகளை மேற்கொள்வது போன்ற திட்டங்கள் நடைமுறைபடுத்தப்படவுள்ளன.

## நீர்வளங்களை பாதுகாக்க திட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் தேசநிர்மாணிகள் பிரிவின் அனுசரணையுடன் யாழ். குடாநாடு நீர்வளங்களைப் பாதுகாப்பது தொடர்பாக பெருந்திட்டம் ஒன்றை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் தலைமையிலானகுழுதயாரித்து வருகிறது.

புவியியல் அமைப்பு, நீரின் பாவனை, நன்னீரைத் தேக்குதல், உவர் தடுப்பு ஆகிய சகல அம்சங்களும் ஆராயப்பட்டு, இப்பெருந்திட்டம் தயாரிக்கப்பட்டுவருகிறது.

## அபிவிருத்திகுழு நடாத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுவின் அனுசரணையுடன், யாழ். மாவட்டத்தில் விளையாட்டுக் கழகங்களிடையே நடத்தப்படவுள்ள உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள், இன்று சனிக்கிழமை முதல் ஆரம்பமாகின்றன.

இப்போட்டிகள், வலிகாமம் கிழக்கு, வலிகாமம் மேற்கு, தென்மராட்சி என மூன்று பிரிவுகளாக நடத்தப்படவுள்ளன. வலிகாமம் கிழக்குப் பிரிவில் 24 விளையாட்டுக் கழகங்களும், வலிகாமம் மேற்குப் பிரிவில் 18 கழகங்களும். தென்மராட்சிப் பிரிவில் 19 கழகங்களும் பங்குபற்றுகின்றன.

வலிகாமம் கிழக்குப் பிரிவின் போட்டிகள்அனைத்தும் யாழ். பல்கலைக்கழகமருத்துவ பீட மைதானத்திலும், வலிகாமம் மேற்குப் பிரிவின் போட்டிகள் சுன்னுகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்திலும், தென்மராட்சிப் பிரிவுப் போட்டிகள் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மைதானத்திலும், நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் நடைபெறும்.

இன்று யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் ஆரம்பமாகும் போட்டியில், குருநகர் பாடும் மீன் கழகமும், ஊரெழு றோயல் கழகமும் மோதுகின்றன. (வி)


## "வீமா" இன்று திறப்பு விழா

வர்த்தக ஸ்தாபனங்கள், பாடசாலைகள், சனசமூக நிலையங்களுக்கு வேண்டிய றபர் ஸ்ராம்புகள் சிறந்த முறையில் செய்து பெற்றுக்கொள்ள...

"வீமா"

ஆனைப்பந்தி சந்தி அருகாமையில்

நாவலர் வீதி, யாழ்நகர்.

விளம்பரம்: ஷண் றெக்கோடிங் ஸ்பொட்.

(சி-6059)


## கோப்பாய் பகுதியில் நிறுவை அளவைகளுக்கு முத்திரையிடும் வேலை

(மானிப்பாய்)

யாழ். நிறுவை அளவைகள் திணைக்களத்தினர் இம்மாதம் 16ம், 17ம், 19ம், 20ம் திகதிகளில் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் வைத்துநிறுவைஅளவைகளுக்கு முத்திரையிட்டு கொடுக்கப்படுமென அறிவித்துள்ளனர்.

இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இப்பகுதி சகல வர்த்தகர்களும் தமது நிறுவை அளவைகள் உபகரங்களுக்கு முத்திரையிட்டு செல்லுமாறு இத்திணைக்கள பரிசோதகர் திரு. க. கிருஷ்ணராசா கேட்டுள்ளார். (71)

## தரவு வங்கி ஆரம்பம்

(வட்டுக்கோட்டை)

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டம் தனது பிரிவுக்குட்பட்ட ஆளணியினர் பற்றிய 'தரவு வங்கி' ஒன்றினை பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. எஸ். வி. மகேசவேல் தலைமையில் அங்குரார்ப்பணம்செய்து வைக்கவுள்ள.

இந்தத் 'தரவு ங்வகி'யில் அதிபர், ஆசிரியர்களது விவரங்கள் மார்ச் 6ம் தேதியில் உள்ளபடி சேகரித்து வைக்கப் படவுள்ளன.

இந்தத் 'தரவு வங்கி'க்குப் பொறுப்பதிகாரியாக உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. மு. திருநீலகண்டசிவம் கடமை யாற்றவுள்ளார். (139)


## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ் கிளை தலைமை அலுவலகம்

### தையல் பயிற்சி ஆசிரியர்

பளை, மருதங்கேணி, ஊர்காவற்றுறை, வேலணை, நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கான மேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள் தகைமையும் அனுபவமும் உள்ளோரிடமிருந்து 17-03-92 வரை எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும். 18-03-92 (பிற்பகல் 2-00 மணிக்கு) எமது பணிமனையில் நேர்முகப் பரீட்சைக்கும் செய்முறைப் பரீட்சைக்கும் சமுகம் தரவும்.

ச. சிவானந்தராசா
கௌரவ செயலாளர்

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(எ-1984)

## தேவை

வடமராட்சிப் பகுதியில் உள்ள 'கற்பகா' பாண் சாலைக்கு அனுபவமுள்ள 'பேக்கர்' தேவை. சம்பளம் பேசித் தீர்க்கப்படும். உடன் தொடர்பு கொள்ளவும்:

'தாலமுதம்'
மந்திகை,
புலோலி.

(ஏ 1986)

# விடுதலைப் புலிகளை தடைசெய்யக் கோரியபோது இந்திய நாடாளுமன்றத்தில் கூச்சல், குழப்பம்!

(புதுடில்லி)

புலிகள் இயக்கத்தை இந்தியாவில் தடைசெய்யப்படவேண்டும் என்ற கோரிக்கை, இந்திய ராஜய சபாவிலும், லோகசபையிலும் எழுப்பப்பட்டது.

இதையடுத்துச் சுமார் அரை மணித்தியாலம் வரை சபையில் கூச்சலும், குழப்பமும் ஏற்பட்டது.

புலிகளைத் தடைசெய்ய வேண்டுமெனச் சில எம். பி.க்கள் கோரிக்கை விடுத்தபோது அதனை மேற்படி இரு சபைகளிலும் பலர் எதிர்த்து, கூச்சல், குழப்பம் விளைவித்தனர். இதனால் சுமார் அரை மணித்தியாலம் சபை நடவடிக்கை ஒத்திவைக்கப்பட்டது.

ராஜீவ் கொலையை அடுத்துப் புலிகளுக்கு எதிராகவும், ஆதரவாகவும் இந்திய இரு சபைகளிலும் பல தடவை விவாதம் நடைபெற்றுவந்ததும், 'தடா சட்ட'த்தை மீறி, தமிழகத்தில் புலிகளுக்கு ஆதரவாகத் தொடர்ந்தும் மாநாடுகள், கூட்டங்கள் நடைபெற்று வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (சி)

## நியமனம்

(மானிப்பாய்)

வடக்கு-கிழக்கு மாகாணங்களின் உதவிப் பதிவாளர் நாயகமாக திரு. க. முத்துக்குமாரு கடந்த மாதம் முதல் நியமனம் பெற்றுள்ளார்.

## ராணுவ தாக்குதலினால் மீன்பிடி பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

பூநகரி-சல்முனை பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர் கடற்பகுதிகளை நோக்கித் தாக்குதல் நடத்துவதனால் மீனவர்கள் தொழில் செய்ய முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

இப்பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர் கிழக்கு அரியாலைப் பகுதியை நோக்கி 50 கலிபர் தாக்குதல் மற்றும் ஷெல் தாக்குதல்களைத் தொடர்ந்து நடத்தி வருகின்றனர்.

## வாழ்க்கை தொழிற் பயிற்சி விண்ணப்பம் கோர படுகிறது

(மானிப்பாய்)

சமூக சேவைகள் திணைக்களம், வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நெறிக்கு ஆட்களைச் சேர்ப்பதற்கு, வலது குறைந்த ஆண், பெண் இரு பாலாரிடம் இருந்தும் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

இப்பயிற்சி நெறியானது, கப்பஹா மாவட்டத்திலுள்ள சீதுவை, கண்டி மாவட்டத்தில் உள்ள கெடவல வெவல, வத்தேகம தொழிற் பயிற்சி நிலையங்களிலும் மற்றும் இத்திணைக்களத்தின் அனுசரணையுடன் நடாத்தப்படும் ஏனைய தொழிற் பயிற்சி நிலையங்களிலும் பயிற்சி அளிக்கப்படும்.

இப்பயிற்சி நெறியில், தும்பு வேலை, புடவை நெய்தல், கடிகாரம் திருத்துதல், தச்சு வேலை, தகர வேலை, மின் இணைப்புப் போன்ற 19 வேலைகள் அடங்கும்.

இதற்கான விண்ணப்பங்களை, இம்மாதம் 20ம் திகதிக்கு முன்னர், பதிவுத் தபால் மூலம் சமூக சேவைகள் பணிப்பாளர், இல. 98, டி. எஸ். சேனநாயக்கா மாவத்த, கொழும்பு-8 என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

இதற்கான முழு விபரங்களும், 1992 பெப்ரவரி 7ம் திகதி வெளிவந்த வர்த்தமானியில் பிரசுரமாகியுள்ளது. (71)

## யாருடையது

(யாழ்ப்பாணப்)

கொக்குவிலில் நேற்று திரு. ஆ. சிவநாதனுடைய கூப்பன் புள்ளிகளும் பிறப்பு அத்தாட்சிப்பத்திரமும் திருநெல்வேலியை சேர்ந்த திரு. சு. கனகரத்தினம் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது, உரியவர் அத்தாட்சி காட்டி பெற்றுக் கொள்ளலாம்.

## சரித்திர வரைபட ஆவணம்

(யாழ்ப்பாணம்)

சரித்திர ஆவணமாகப் பாதுகாப்பதற்காக நல்லூரிலுள்ள சங்கிலியன் தோப்பு அளவு எடுக்கப்பட்டு, வரைபடங்கள் தயாரிக்கும் முயற்சியில் தேச நிர்மாணிகளின் பொறியியல் மதியுரையகம் செயற்பட்டுவருகிறது.

## அமைதி ஏற்படுமென்றால் சமஷ்டியை ஏற்கலாம் அமைச்சர் ரணசிங்க

(கொழும்பு)

நாட்டில்அமைதி ஏற்படுமென்றால் சமஷ்டி ஆட்சியையும் ஏற்கலாம் என்று தகவல் துறை ராஜாங்க அமைச்சர் ஏ. கே. ரணசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினர்,

நாட்டில் அமைதியை மீண்டும் ஏற்படுத்தவும் தேசிய ஒற்றுமையை உறுதிப்படுத்தவும் சமஷ்டி அமைப்பு முறை உதவுமென்றால் அதனை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும்என்றும் அவர் மேலும் கூறினர்.

அண்மைக்காலமாக இதே கருத்து பலதரப்பிலிருந்தும் வலியுறுத்தப்பட்டு வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## ★ யாழ். மருத்துவ பீட விவகாரம்: ஆணைக்குழு தலைவர் விளக்கக் கடிதம்

(கொழும்பு)

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடம் மூடப்படுவது தொடர்பாக, பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்தன. இச் செய்திகளைப் பத்திரிகைகள் மூலமாக அறிந்த பல்கலைக் கழக மானிய ஆணைக் குழுத் தலைவர் பேராசிரியர் அருச்சுன அலுவிகார, இவ்விடயம் சம்பந்தமாகக் கடிதம் ஒன்றை யாழ். பல்கலைக் கழகத் துணை வேந்தருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

அக்கடிதத்தின் விபரம் வருமாறு: யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மருத்துவபீட மாணவர்களுக்கான வசதிகள் பற்றிய ஏற்பாடுகள்: இது தங்களது 1992 ஜனவரி 23ம் திகதிக் கடிதம் பற்றியது.

நான் பேரவையின் தீர்மானத்தைக் கவனித்தபோது, எனது கடிதம் கவனமாக வாசிக்கப்பட்டதாகத் தெரியவில்லை என்பதனையிட்டு ஆழ்ந்த குழப்பமடைகிறேன். பீடம் விரும்பினல் அதற்கு உதவும் நோக்கத்துடனேயே எனது ஆலோசனை முன்வைக்கப்பட்டது. பல்கலைக்கழகத்தின் விருப்பங்களுக்கு மாறாக மருத்துவபீடத்தை மாற்றுவதற்கான ஒரு முயற்சியையே இக்கடிதம் கொண்டுள்ளது எனப் பல்கலைக்கழகப் பேரவையோ அல்லது வேறெந்த அமைப்போ ஏதாவதொரு வகையில் பொருள் கொண்டால் அது உண்மையல்ல.

எனக்கும், துணை வேந்தருக்கும் அத்துடன் பேரவைக்கும், மூதவைக்கும் இடையிலான கடிதத் தொடர்பு, மருத்துவ பீடத்தை மூடிவிடுவதற்கான முயற்சிகள் செய்கின்றோம் என்ற கருத்தைச் செய்திப் பத்திரிகைகளுக்கு ஏற்படுத்தி உள்ளமை குறித்து நான் மிகுந்த கவலை அடைந்துள்ளேன்.

எனவே, எனது உண்மையான கருத்துக்களைச் சரியான முறையில், செம்மையாக எனது கடிதத்தை மொழிபெயர்ப்புச் செய்வதன் மூலம் பத்திரிகைகளுக்கு எடுத்துக் கூறுவீர்களாயின் நான் அதற்கு நன்றி உடையவனுவேன்,

மருத்துவபீடம் தொடர்ந்து நல்ல முறையில் இயங்குவதை அறிந்து நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

## மக்கள் அஞ்சலி

(கிளிநொச்சி)

வீரவேங்கை டேவிட்டின் புகழுடல் மக்கள் அஞ்சலிக்காக கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் அருகில் வைக்கப்பட்டபோது பெரும் திரளாக மக்கள் அஞ்சலி செலுத்தினர்கள். கைப்பற்றப்பட்ட ஆயுதங்களும் பார்வைக்கு வைக்கப்பட்டன. (83

## இராசி பலன்

**14 03 1992**
**சனிக்கிழமை**
**(தமிழுக்கு பங்குனி 01)**

தசமி மு. ப. 10-40 வரை, புனர்பூசம் பி. ப. 4-50வரை, இராகுகாலம் காலை 9-21 முதல் 10-51 வரை, சுபநேரம் மாலை 3-21 முதல் 4-51 வரை, சித்தயோகம்.

மேடம்: தாயாருக்கு துன்பம், தைரியகுறைவு, பல மிகுதி.

இடபம்: வாக்கு சாதுரியம், தொழில்லாபம், அதிர்ஷ்டம்.

மிதுனம்: மந்தபுத்தி, கடுமையான வாக்கு. குடும்ப சுகம்.

கடகம்: தொழில் உயர்வு, தானதர்மம், அற்பதனம்,

சிங்கம்: மனக்குறை, அந்நியப்படல், யோசனை.

கன்னி: களத்திரதோஷம், தெய்வதரிசனம், பணவரவு.

துலாம்: கடித உறவு, பெரியோர் உதவி, காரியவெற்றி.

விருச்சிகம்: மனக்குமுறல், குடும்பவேற்றுமை, அசதி,

தனுசு: நிலையற்றநிலை, அகால போஜனம், உடல் உபாதை.

மகரம்: தொழில்மேன்மை, வேலைப்பழு. பாராட்டு.

கும்பம்: புதிய ஸ்தானம், நண்பருதவி, புத்திரர் பெருமை.

மீனம்: குடும்ப கவலை, வீண் வம்பு, வைத்தியசெலவு,

- ஜோஸ்யர்

## அன்னை பூபதி நினைவு பொது அறிவுத் தேர்வு நேர அட்டவணை

(யாழ்பபாணம்)

அன்னை பூபதி நினைவுப் பொது அறிவுத்தேர்வு (1992) நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கிறது. இதற்கான நேரஅட்டவணை வருமாறு.

| | வினாப்பத்திரம் - 1 | | வினாப்பத்திரம் - 2 |
|---|---|---|---|
| 7ஆம் ஆண்டு | 8. 30 – 10. 30 | — | 11.00 – 12. 30 |
| 8ஆம் ஆண்டு | 8. 30 – 10.30 | — | 11. 00 - 12.30 |
| 9ஆம் ஆண்டு | 8. 30 - 10. 30 | — | 11.00 - 12. 30 |
| 10ஆம் ஆண்டு | 8. 30 – 11.00 | — | 11. 30 – 1. 30 |
| 11ஆம் ஆண்டு | 8. 30 – 11. 00 | — | 11. 30 – 1. 30 |
| 12ஆம் ஆண்டு | 8. 30 – 11. 30 | — | 12. 00 – 2. 00 |
| 13ஆம் ஆண்டு | 8. 30 – 11. 30 | — | 12. 00 – 2, 00 |

## வடமாகாண இணைப்புக் கல்லூரி விரிவுரை ஆரம்பம்

(வவுனியா)

வடமாகாண இணைப்புப் பல்கலைக்கழக விரிவுரைகள் வவுனியாவில் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

வவுனியாவில் அமைந்துள்ள வட மாகாண இணைப்புப் பல்கலைக்கழக விரிவுரைகள் கடந்த வாரம் வைபவ ரீதியாகப் பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுத் தலைவர் பேராசிரியர் அருச்சுன அலுவிவார வினல் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

## நெல் விளைச்சல் 98 வீதம் வெற்றி

(உடுவில்)

கெயர் ஸ்தாபனத்தினல் வழங்கப்பட்ட விதைநெல்லை பெற்றுக்கொண்ட விவசாயிகள் அதன் மூலம் இம்முறை 98 சதவீதமான அறுவடையை பெற்றுள்ளனர். விவசாயிகளின் நலன்கருதி செயற்படும் கெயர் ஸ்தாபன உதவித்திட்டம் வெற்றியளித்திருப்பதாக கூறப்படுகிறது,

சங்கானை ப. நோ. கூ. சங்க எல்லையில் கெயர் ஸ்தாபனத்திடமிருந்து விதைநெல் பெற்ற விவசாயிகளின் அறுவடைவிழா அண்மையில் சங்கானை கிழக்கு முருகமூர்த்தி கோவிலடியில் நடைபெற்றது.

சங்கத்தலைவர் திரு, வை. செந்திநாதன் தலைமையில் நடைபெற்ற இவ் அறுவடை விழாவில் கெயர் ஸ்தாபனத்தின் பிரதிநிதி திரு. எஸ். சனகரத்தினம் விசேடமாக கலந்துகொண்டார்.

மாவட்ட கூட்டுறவு சபை செயலாளர் திரு. க. சிவசுப்பிரமணியம், இணைப்பு உத்தியோகத்தர் திரு. க. சிதம்பரநாதன், பொதுமுகாமையாளர் திருமதி ப, மகேஸ்வரன், திரு. ஆ. இராசரட்ணம், திரு. மு. வாமதேவன், திரு. எஸ், கதிரமலை உட்பட பல பிரமுகர்கள் இவ்விழாவில் கலந்துகொண்டனர். (109)

## யாழ். விஞ்ஞான சங்க முதல் வருட நிறைவு

(யாழ்ப்பாணம்)

யாழ். விஞ்ஞான சங்க முதல்வருட நிறைவுப் பொதுக்கூட்டம், 23-04-1992 தொடக்கம் 25-04-1992வரை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் அ. துரைராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் விமர்சனக் கட்டுரைகள், ஆராய்ச்சிக் கட்டுரைகள், கருத்தரங்குகள், தலைவர்களின் உரை, மாணவர்களுக்கான பரிசு வழங்கல் என்பன நடைபெறவிருக்கின்றன. இதில் புதிய நிர்வாக சபை உத்தியோகத்தர்கள் தெரிவுசெய்யப்படுவர். அச்சுருவில் தலைமை உரையும், கட்டுரைச்சுருக்கங்களும் இவ்வமர்வில் விநியோகிக்கப்படும்.

உறுப்பினர்கள் 1992ற்கான அங்கத்துவத்தை புதுப்பித்துக்கொள்ள வேண்டும் எனவும், புதிய அங்கத்தவர்களாகச் சேரவிரும்புபவர்கள் செயலாளருடன் தொடர்பு கொள்ளும்படியும் அறிவிக்கப்படுகிறார்கள்.

## தவக்கால நற்சிந்தனை

''உங்கள் பகைவர்களுக்கு அன்புசெய்யுங்கள். உங்களைத் துன்புறுத்துவோருக்காகச் செபியுங்கள்''

(மத்.5: 44)

பகைவனுக்கும் எனக்கும் இடையில்அன்புப்பாலத்தை நாம் ஏற்படுத்த வேண்டும். நாம் உண்மையான அன்பு செய்தால்தான் ஆண்டவரை அடையலாம்.

**மோ. தார்சிசியஸ்**

# இந்திய இராணுவத் தளபதி பதவி நீக்கப்படவேண்டும்

## — எதிர்க்கட்சிகள் வலியுறுத்து

(புதுடில்லி)

இந்திய இராணுவ தலைமைத் தளபதி ஜெனரல் எஸ். எப். றொட்றிக்கஸ் பதவி நீக்கம் செய்யப்பட வேண்டுமென எதிர்க்கட்சியினர் இந்திய அரசை வலியுறுத்தியுள்ளனர்.

இந்தியாவும், பாகிஸ்தானும் அணுவாயுதமற்ற தெற்காசியப் பிராந்தியத்தை உருவாக்க ஒப்பந்தம் ஒன்றைச் செய்யவேண்டுமென வலியுறுத்த அமெரிக்கா, ரஷ்யா, சீனு ஆகிய மூன்று பெருச்சாளிகளுக்கும் என்னவேலையென பத்திரிகைகளுக்கு செய்தி கொடுத்தது, அண்டைய நாடுகளின் உறவைக் கெடுக்கக் கூடிய ஒரு செயலாகையால் திரு. றொட்றிக்கஸ் உடனடியாக பதவி நீக்கம் செய்யப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சியினர் அரசைக் கேட்டுள்ளனர். (வி)

# பிரதேச செயலர் பணிமனைகள் நிர்வாகம் செயலகத்தில் முடக்கம்

(சித்தன்கேணி)

யாழ். மாவட்டத்தில் பிரதேச செயலர் பணிமனைகள் ஆரம்பிக்கப்பட்டும் நிர்வாகம் செயலகத்திலேயே முடங்கிக் கிடக்கின்றன.

யாழ். மாவட்டத்தில் பிரதேசசெயலர் பணிமனைகள் ஆரம்பிக்கப்பட்டு மூன்று மாதங்களாகியும் நிர்வாகம் எதுவும் பரவலாக்கப்படாமல் யாழ். அரசாங்க செயலகத்திலேயே முடங்கிக்கிடப்பதாக யாழ். செயலகத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவிக்குள்ளார். (37)

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

கைதடி-நாவற்குழி மகாவிஷ்ணு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பி. ப. 2 மணிக்கு அதிபர் வே. இராமர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கு கைதடி முன்னாள் கொத்தணி அதிபர் சோ. கணேசலிங்கம் பிரதம அதிதியாக கலந்துகொள்கின்றார்.

சிறப்பு விருந்தினராக நா. சத்தியநாதனும் கலந்து கொள்கின்றார். பரிசில்களை திருமதி புஷ்பா கணேசலிங்கம் வழங்குவார். (வி)

## பாடசாலை அதிபர்கள் கவனத்துக்கு

(யாழ்ப்பாணம்)

நாளை 15ம் திகதி யாழ் மாவட்டப் பாடசாலைகளில் கல்வித் திணைக்களத்தால் ஒழுங்குசெய்யப்பட்ட நிகழ்ச்சிகள் மாத்திரம் மறு அறிவித்தல்வரை பின்போடப்பட்டுள்ளதென்றும் இவற்றுக்கான திகதிகளை கோட்டக்கல்விப் பணிப்பாளர்கள் பின்னர் அறிவிப்பார்கள் என்றும் யாழ். கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் சகல பாடசாலை அதிபர்களுக்கும் அறிவித்துள்ளார்.

## தாதிகளுக்கு நியமனம்

(கொழும்பு)

நாட்டிலுள்ள ஏழு தாதிகள் பயிற்சிக் கல்லூரியில் மூன்று வருட கால பயிற்சிபெற்ற 1097 தாதிகளுக்கு நியமனம் அண்மையில் வழங்கப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள 286 ஆஸ்பத்திரிகளில் இத்தாதிகள் கடமையாற்றவிருக்கிறார்கள். (மா)

# யாழ். மாவட்டத்தில் தேனீ வளர்ப்புத் திட்டம்

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்டத்தில் சுயதொழில் முயற்சியாகத் தேனீவளர்ப்பு மேற்கொள்ளப்படஉள்ளது. யாழ். மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றார்.

தேனீவளர்ப்பை ஊக்குவிக்கும் முகமாக விவசாயத் திணைக்களம் உதவிகளை வழங்கவுள்ளது. தேனீவளர்ப்பில் ஈடுபடவிரும்பும் பொதுஸ்தாபனங்களைத் தம்முடன் தொடர்புகொள்ளுமாறு விவசாயப் பணிப்பாளர் கோரியுள்ளார். (154)

## பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கலாநிதி ஆ. தியாகராசா ம. மகா வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச்சபை வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மண்டபத்தில் கொத்தணி அதிபர் செ. தேவதாசன் தலைமையில் நடைபெறும்.

## பின்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

நாளை 15ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-00மணிக்கு தமிழீழ ஆய்வுநிறுவன மையப் பணியகத்தில் பொறியியலாளர்களுடன் நடைபெற ஒழுங்குசெய்யப்பட்ட கலந்துரையாடல் அதே தினத்தன்று பி. ப. 2-00மணிக்கு பிற்போடப்பட்டுள்ளது.

# தெரிவுக்குழுவை சந்திக்க புலிகள் விருப்பமாம்

[கொழும்பு]

நாடாளுமன்ற தெரிவுக்குழுவை சந்திக்க விடுதலைப் புலிகள் விருப்பம் தெரிவித்துள்ளதாக கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

தமது விருப்பத்தை விடுதலைப் புலிகள், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமூலம் தெரிவுக்குழுவின் தலைவர் திரு மங்கள முனசிங்கவுக்கு தெரிவித்துள்ளனராம்.

இதேவேளை புலிகளின் இந்த விருப்பத்தை கடிதமூலம் பெற்றுத்தருமாறு திரு. மங்கள முனசிங்க சர்வதேச செஞ்சிலுவைச்சங்க பிரதிநிதிகளுக்கு அறிவித்துள்ளாராம்.

இதற்கிடையில் தெரிவுக்குழு முன் சாட்சியமளிப்பதற்கான கடைசி நாள் இன்றாகுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### வடக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையிலே இவ்வாறு கூறினார்.

''இனப்பிரச்னைக்கு தெரிவுக் குழு சமர்ப்பிக்கும் முடிவை நாம் ஏற்றுக்கொள்வோம். அரசு புலிகளுடன் பேசுவதாக இருந்தாலும் அதற்கு நாங்கள் எதிர்ப்புத் தெரிவிக்கமாட்டோம் என்றும் அவர் கூறினார்.

### வடக்கு, கிழக்கு

(1-ம பக்கத் தொடர்ச்சி)

பட்டுவருகின்றன.

இம்முயற்சிகள் வெற்றியளிக்கும் பட்சத்தில் சகல சமூகத்தினரும் நன்மைபெறக் கூடியதாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார். (க)

### கைத்தறி நெசவு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்களுக்கு யாழ். அரச அதிபர் உறுதியளித்தார்.

யாழ். மாவட்டத்திலுள்ள 78 நெசவாளர் சங்க உறுப்பினர்கள் நேற்று யாழ். செயலகத்தில் யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகரைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினர்.

மேற்படி சங்க உறுப்பினர்கள், கடந்த சில வருடங்களாக இயங்காமல் இருக்கும் கைத்தறி நிலையங்களினால் பெருந்தொகையான நெசவாளர்கள் பாதிப்படைந்துள்ளதாகவும், இந்நிலையங்கள் மீண்டும் இயங்குவதற்கு ஆவன செய்து தரும்படி இவர்கள் அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்தனர். (வி-மா)

### கிறிஸ்தவ குழு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

யாழ். மாவட்டத்தின் தற்போதைய நிலையை அரச அதிபர் அவர்களுக்கு விரிவாக எடுத்துக் கூறியுள்ளார். அரச அதிபரின் கூற்றுக்களையும், தாம் நேரில் பார்த்தவற்றையும் விரைவில் ஜனதிபதி ஆர், பிரேமதாசாவிடம் எடுத்துக் கூறப்போவதாகவும் கிறிஸ்தவக் குழுவினர் அரச அதிபரிடம் கூறியுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இந்தக் குழுவினர் நாளை 15-ஆம் திகதி விடுதலைப் புலிகள் பிரமுகர்களுடன் கோண்டாவிலிலுள்ள விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலகத்தில் சந்தித்துப் பேச்சுக்கள் நடாத்தவுள்ளனர். (வி-மா)

### கூட்டுறவுச் சங்கங்களில்

(1-ம பக்கத் தொடர்ச்சி)

தேவையான அளவு பொதுமக்கள் புதிய விலையில் பெற்றுக்கொள்ளலாமெனவும்கூறப்படுகின்றது.

சீனியையும் இது போல் விரைவில் தேவையான அளவு கொள்வனவு செய்யமுடியுமென அதிகாரி ஒருவர் நேற்றுத் தெரிவித்தார். (வி-மா)

## லக்ஸ்பிறே விலை குறைப்பு

(கொழும்பு)

'லக்ஸ்பிறே' பால் மாவின் விலை கிலோவுக்கு 2 ரூபாவால் குறைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் முதல் இவ்விலைக் குறைப்பு அமுல்படுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க)

### யாழ். ஆயர்

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

ஓய்வு பெற்றதும், அவரது இடத்துக்குத் தற்போது மட்டுநகரில் ஆயராக இருக்கும் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை நியமிக்கப்படலாமென்றும் கூறப்படுகின்றது. (வி)

### வெளிநாட்டு

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

படுத்தப்பட்டுள்ளன.

இலங்கையிலிருந்து குடிபெயர்ந்து செல்வோரின் மூலதனமாற்றங்கள் தனி ஒருவருக்கு தற்சமயம் இருக்கும் 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவில் இருந்து 5 லட்சம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் மேலும் பல வெளிநாட்டு நாணய மாற்று கட்டுப்பாடுகளும் தளர்த்தப்பட்டுள்ளன. (மா)

## அவசர கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு யாழ்ப்பாண பட்டப்படிப்புகள் கல்லூரியில் தொண்டர் ஆசிரியர்களின் அவசரக் கூட்டம் கூட்டப்படவுள்ளது. அனைத்து ஆசிரியர்களும் தவறாது இதில் சமூகமளிக்குமாறு தொண்டர் ஆசிரியர் சங்கம் கேட்டுள்ளது.

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய வர்த்தக ஊழியர்சங்கத்தின் வருடாந்த பொதுகூட்டம் இன்று பிற்பகல் 2-30 மணிக்கு யாழ். கொட்டடி நமசிவயம் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

வர்த்தகர் சங்க பதில் தலைவர் திரு. கே. வி. சிவராசா தலைமையில் நடைபெறும் மேற்படி கூட்டத்தில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி தொழிற்சங்கப் பொறுப்பாளர் கலந்து கொள்ளவுள்ளார்.

சகல வர்த்தக நிலையங்களும் இன்று பிற்பகல் 2 மணியுடன் பூட்டப்பட்டு அனைத்து ஊழியர்களும் மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி வர்த்தக ஊழியர் சங்க செயலாளர் கேட்டுள்ளார். (க)

### இலங்கையின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொருளாதாரத்தை மிகவும் பாதித்துள்ளன.

இதேவேளையில் இலங்கையில் தற்போது ஏற்பட்டிருக்கும் கடும்வரட்சி காரணமாக நாட்டில் தேயிலை உற்பத்தி மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது.

இதனால் தேயிலை ஏற்றுமதி மூலம் கிடைக்கவிருக்கும் பெருமளவு வெளிநாட்டு சம்பாத்தியம் கிடைக்காதநிலை ஏற்பட்டுள்ளது.

இந்தப் பொருளாதாரத் தாக்கங்கள் இந்தவருடத்திற்கான வரவுசெலவுத்திட்டத்தைப் பெரிதும் பாதிக்குமெனவும் 1992 93ம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டத்தில் பெருந்தொகை துண்டுவிழும் எனவும் பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

## உலக கிண்ண கிரிக்கெட்

# அரையிறுதியாட்ட தகுதியை இலங்கையும் இழந்தது

(மெல்போன்)

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் நேற்றைய ஆட்டத்தில் மேற்கு இந்திய அணியிடம் இலங்கை 91 ஓட்டங்களால் தோல்வியடைந்ததன் மூலம் அரையிறுதி ஆட்டத்திற்கான வாய்ப்பை இழந்தது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கு இந்திய அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 268 ஓட்டங்களைப் பெற்றது. சிமென் 110ஓட்டங்களைப்பெற்றார். ஹத்துறு சிங்ஹா 57 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இலங்கை 50 ஓவர்களில் 9 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 178 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. (அத்துலசமரசேகர 40 ஓட்டம் பெற்றார்) (வி)

# நாடுகள் பெற்ற புள்ளிகள்

(மெல்போர்ன்)

உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்றும் நாடுகள்தற்போது பெற்றுள்ள புள்ளிகளின் விபரம் வருமாறு:

நியூஸிலாந்து - 12, இங்கிலாந்து - 11, தென்ஆபிரிக்கா -8, மே. இந்தியா - 8; இலங்கை - 5; இந்தியா - 5; பாகிஸ்தான் - 5, அவுஸ்திரேலியா - 4, சிம்பாவே - 00. (வி)

## தொழில் நுட்ப குழு

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகத்தில் யாழ். மாவட்ட ஒப்பந்தகாரர்களின் பிரச்னைகளைத் தீர்க்க தொழில் நுட்பக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

## 2கோடி ரூபா புடவைகள் பறிமுதல்

(கொழும்பு)

சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட சுமார் 2 கோடியே 1 லட்சம் ரூபா பெறுமதியரன புடவை வகைகள் தலங்கம பொலிசாரால் நேற்று முன்தினம் கைப்பற்றப்பட்டுள்ளன.


## மரண அறிவித்தல்

### பொ. பாலேந்திரா ஐயர்

தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலய குருக்கள் திரு. பொன்னுத்துரை ஐயர் பாலேந்திரா ஐயர் காலமாகி விட்டார். அன்னாரது ஈமக்கிரியைகள் 13-03-92 [நேற்று] தொண்டமானாறில் நடைபெற்றது.

தகவல்:
ச. செல்வேந்திரா

[எ 1985]


இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு மார்ச் மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registred as a News Paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/81.